தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 10, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 ஜனவரி 23, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு"

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 21, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

21—

நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம்

***35512—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா பல்கலைக்கழகம் ஜெர்மன் பல்கலைக்கழகத்துடன் நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம் சம்பந்தமாக ஒப்பந்தம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொறியியல் ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம் தொடர்பாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தம் நவீன தொழில் நுட்பப் பரிமாற்றம் என்று குறிப்பிடுகின்றபோது, என்னென்ன வகை என்பதை அறிவிக்க இயலுமா, அல்லது எத்தனை ஆண்டுகளுக்கு இது நீடிக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்கலைக்கழகத்திற்கு கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நவீன முறைகளை மேற்கொள்வதற்கும், செயல்படுவதற்கும் உரிமை இருக்கிறது. அந்த முறையிலே அண்ணா பல்கலைக்கழகம் இந்த ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறது. அப்படி ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த உடன்பாடு, புகைப்படக் கணிப்பியல் Photo-Grametry, தொலை உணர்வு—Remote Sensing, புவி அமைப்புத் தகவியல்—Geo Informatics ஆகிய புலங்களில் தொழில்நுட்ப ஆராய்ச்சியை மேம்படுத்தும் வகையில் இந்தப் பல்கலைக்கழகம், ஜெர்மனியில் உள்ள ஸ்டெப்காட் செயல்முறை அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இந்த உடன்பாட்டை மேற்கொண்டுள்ளது. அதேபோல, Remote Sensing and Photo-Grametry ஆகிய பிரிவுகளில் ஜெர்மனியிலே உள்ள ஹெனோவர் பல்கலைக்கழகத்தோடு 17-4-2000-ல் மேலும் ஒரு உடன்பாடு மேற்கொண்டுள்ளது. இதனுடைய முக்கியமான நோக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஒத்துழைப்புப் பெறுவது, ஆய்வுத் தகவல் பரிமாற்றம் செய்துகொள்வது, ஆசிரியர்கள் பணிமாற்றம் தேவையான வகையில், தேவைப்படுகிறபோது செய்து கொள்வது, உயர்கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளில், இளநிலை- முதுநிலை மாணவர்களைப் பரிமாறிக் கொள்வது.

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்நோக்கம் இல்லாமல் கேள்வி கேட்க முடியுமா? திரு. சி. ஞானசேகரன், கேளுங்கள்.

2001 ஜனவரி 23]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம் ஏற்கெனவே இந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களோடு இப்படி ஒப்பந்தம் போட்டு, கல்வியினுடைய வளர்ச்சிக்கு நல்ல ஒரு முயற்சி எடுத்திருக்கிறது, நன்றி. ஆனால் நிறைய பேர் நம்முடைய தமிழகத்தில் பொறியியல் துறையில் பல பட்டங்களைப் பெற்றுவிட்டு, வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கென்று தனியாக ஒரு Corporation வைத்து, அதாவது யாரெல்லாம் இதுமாதிரி தொழில்நுட்பக் கல்வியைப் பயின்று இருக்கிறார்களோ, அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்து, வெளி நாட்டில் இருக்கக்கூடிய தேவைகளைப் பூர்த்தி செய்ய, இந்தக் Corporation மூலமாக அவர்களை வேலைக்கு அனுப்பி வைத்து, இங்கேயிருக்கக்கூடிய இந்த வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கெல்லாம் ஒரு நல்வாழ்வு கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? இந்த வேலையில்லாப் பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்க அரசு வழி வகுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக, இந்தக் கேள்விக்குத் தொடர்பில்லாத விவரங்களை அறிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். Man Power Corporation மூலமாக அப்படிப்பட்ட பணிகள் நடைபெறுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது மாண்புமிகு உறுப்பினருக்கு இப்போது வாடிக்கையாகப் போய்விட்டது. நேற்றையதினம் என்னிடம் வந்து, பேசுவதற்கு அனுமதி கேட்டார்கள். 15 நிமிடங்கள் கொடுக்கலாம் என்றேன். துணைத் தலைவரிடம் 20 நிமிடங்கள் கொடுங்கள் என்றேன். 26 நிமிடங்கள் பேசிவிட்டு, வெளியே போய், ஜனநாயகப் படுகொலை என்று பேட்டி கொடுக்கிறார். (சிரிப்பு) அதனால் அவரைப் பற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டியதில்லை.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: இது குறித்துக் கவனிக்க Man Power Corporation இருக்கிறது. அது வேறு அமைப்பு. அந்த அமைப்பிலே ஓரளவு கவனிக்கின்றார்கள். பல்கலைக்கழகத்தினுடைய கல்வித் திட்ட அடிப்படையிலே எழுந்த கேள்வி என்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியைத் தனிக் கேள்வியாகப் போட வேண்டுகிறேன்.